**தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

  - வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

  - நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிலுள்ள பட்டியல்களின் பெறுமதி ரூபா 51,382,223 என நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதும் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் ரூபா 3,713,753 ஆன பொறுப்புக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கிடைத்த அனைத்து உறுதிச் சீட்டுக்களும் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | காலப்பகுதிக்கான பொறுப்புக்கள் அனைத்தும் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**(ஆ) மூலதனச் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைப்பு 292-2 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதிஏற்பாடு சேமிப்புகளுக்கு காரணங்கள் குறிப்பிடும் கூற்றில் ஏசீஏ 2(ii) படிவத்தில் 292-2-2-19-2507 செலவின விடயங்களில் சேமிப்பு மீதி ரூபா 2,026,000 ஆக இருந்த போதும் திறைசேரி அச்சுப் பதிவுகள், எஸ்ஏ-10 படிவத்தின் செலவின பொழிப்பில் குறிப்பிடப்பட்ட சேமிப்புக்கள் மீதி ரூபா 13,331,000 ஆக இருந்தமையால் ரூபா 11,305,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | கணனி மயப்படுத்தும் போது இடம்பெற்ற வேறுபாடொன்றாகும் | திணைக்கள கணக்குகள் திறைசேரி கணக்குகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விடய இலக்கம் 29201 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் மீதி மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே 2015 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 100,125 ஆன வேறுபாடு தீர்வு செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இக்கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு போதியளவு தகவல்கள் இல்லாமையால் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்கள கணக்குகுள் திறைசேரிக் கணக்குகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் முறையாக பரீட்சிக்ககூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 51,382,223 தொகை பொறுப்பு பதிவேடொன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் அன்றாடம் பரீட்சிக்க கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | | |
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சநனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| XV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பந்தி | 17,299,301 | கல்வி, பயிற்சி அல்லது கடமை அலுவல்களுக்காக வெளிநாடு சென்ற 09 உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாமை காரணமாக கட்டாயம் சேவை புரிய வேண்டிய காலம் சேவை புரிவதற்காக மேற்கொண்ட உடன் படிக்கை மீறப்பட்டமையால் இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக | உடன்படிக்கை பிரகாரம் குறித்த பணத்தை அறவிட வேண்டும் |
| (ஆ) 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் கோவையின் xviii ஆம் அத்தியாயத்தின் 193 ஆம் விதி | - | ஒவ்வொரு அரச உத்தியோகத்தரினதும் சேவைக் காலம் 5 ஆண்டுகள் பூர்த்தி யாகும் போது இடமாற்றத்திற்கு உட்பட வேண்டியிருந்த போதும் 15 ஆண்டுகளாக ஒரே இடத்தில் சேவை புரிந்த பின்னரும் இடமாற்றம் கிடைக்காத 105 உத்தியோகத்தர்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதில் 33 உத்தியோகத்தர்கள் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே இடத்தில் செவை புரிந்து வரும் உத்தியோகத்தர்களாக இருந்தனர். | பின்னர் பதிலளிப்பதாக | திணைக்கள இடமாற்ற கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கரந்தகொல்ல கால்நடைக் கட்டுப்பாட்டு கல்லூரியின் 2019/2021 கல்வியாண்டிற்காக கால்நடை வளங்கள் உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசியடிப்ளோமா NVQ 5, 6 மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்து 67 மாணவர்கள் பதிவு செய்திருந்த போதும் கல்வியாண்டின் இடைநடுவில் 34 மாணவர்கள் அதாவது 51 சதவீதமானோர் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர். மாணவர்கள் பாடநெறியை இடையில் விட்டுச் செல்வது காரணமாக பாடநெறியை பின்பற்றுவதற்கான ஏனைய மாணவர்களுக்கு இருந்த சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்ததுடன் விட்டுச்சென்ற மாணவர்களுக்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக இருந்ததுடன் இதன்காரணமாக கால்நடை கட்டுப்பட்டு துறையின் அபிவிருத்தி தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்று நிலைமை காலப்பகுதியில் கட்டுப்பாட்டு கல்லூரி மூடப்பட்டிருந்த மையால் பாடநெறி காலப்பகுதி நீண்டமையால் மாணவர் விலகிச் செல்லல் இடம் பெற்றதாக | மாணவர்களை தரித்து வைத்துக் கொள்ளக்கூடிய வகையில் பாடநெறி திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் |

### 3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 யூன் 28 ஆந் திகதிய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளரின் (நிர்வாக மற்றும் நிதி) PSC/EST/7/4/2/2012 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஆராய்ச்சி உதவியாளர் விஷேட தரத்திற்கான உத்தியோகத்தர்களுக்காக புறம்பான இடமாற்றக் கொள்கையொன்று தயாரித்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென அந்த ஆனைக்குழுவின் | பதிலை பின்னர் வழங்குவதாக | ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தீர்மானத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

### 3.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் விட்டுவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொல்கொல்ல கால்நடை கட்டுப்பாட்டு கிருமிநீக்கல் ஆய்வுகூடத்தை மேம்படுத்துதல் மற்றும் திருத்த வேலைகளுகாக 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரரொருவருக்கு 2018 திசெம்பர் 29 ஆம் திகதிக்கு முன்னர் வேலையை பூர்த்தி செய்வதற்காக ரூபா 3,273,873 ஆன பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்யாமல் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை விட்டு இருக்கையில் 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆய்வுகூடத்தின் திருத்த வேலைகளை முறையாக மேற்கொள்ளாமை காரணமாக உரிய வகையில் கிருமி நீக்கம் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தமை, ஆய்வுகூடத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தடுப்பூசி திரவங்கள் உற்பத்தி செயற்பாடுகள் மிகவும் சிரமத்துடன் மேற்கொள்ளப்படுவதும் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது மீண்டும் திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை கைச்சாத்திட்டு 2 வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதும் வேலை பூர்த்தி செய்யப்படாமையால் 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதி உடன்படிக்கை பூர்த்தி செய்துள்ளதாகவும் பூர்த்தியாக்கப்படாத வேலைகளை எதிர் காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கால்நடை கட்டுப்பாட்டு கிருமிநீக்கல் ஆய்வுகூடத்தின் திட்டங்களின் பிரகாரம் தேவையான பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டும் எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுப்பதாக | கணக்காய்வுச் சட்டம் மற்றும் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 30 ஆந் திகதிய 924 ஆம் இலக்க மற்றும் 2021 ஏப்ரல் 21 ஆந் திகதிய 367 ஆம் இலக்க உறுதிச்சீட்டுக்கள் மூலம் 27 கணனிகள் மற்றும் 27 யூ.பீ.எஸ் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,281,175 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன. | | |
| (i) கணனிகள் மற்றும் 27 யூ.பீ.எஸ் இன் தேவைப்பாடு முன்னரே இனங்காணப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 3,281,175 ஆக இருந்தது. இது அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2,14,1 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகைக் குழு | குண்டசாலை கால்நடை கட்டுப்பாட்டு கல்லூரியால் முதல் 20 கணனிகள் கோரப்பட்டிருந்தன. பாடநெறி மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இருந்ததுடன் மேலதிக கட்டளை மூலம் பெற்றுக்கொண்ட கணனி அலுவலகத்தின் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் உரிய பெறுமதிகளுக்குரிய பெறுகை குழு மூலம் நடவடிக்கை தீர்மானம் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகார பெறுமதியான ரூபா 25 மில்லியனுக்கு குறைந்த பிரதான ஒப்பந்தப் பொருட்கள் மற்றும் சேவைகள் திணைக்கள பெறுகை குழு பரிந்துரையின் கீழ் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும் அக்கொள்வனவுப் பெறுகைக் குழு அதிகார எல்லை ரூபா 03 மில்லியனுக்கு குறைந்த திணைக்கள சிறு பெறுகைக் குழு பரிந்துரையின் கீழ் 02 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன | பயன்பாட்டிற்காக கோரப்பட்டிருந்தன. முதலாவது வேண்டுகோள் சந்தர்ப்பத்தில் மேலதிக கட்டளை மூலம் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் தேவை இனங்காணப்பட்டிருக்வில்லை. அது பின்னர் இனங்காணப்பட்டதாக. | |
| (ii) | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.3 (ஆ) பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைக்கும் பொருட்கள் அல்லது சேவைகளுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,281,175 பெறுமதியான கணனி மற்றும் யூபீஎஸ் கொள்வலனவிற்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பெறுகை செயற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | இனவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2019 ஏப்ரல் மாதத்தின் போது அவுஸ்திரேலியாவிலிருந்து 100 ஆடுகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஆடுகளுக்கு இடையே 05 ஆண் ஆடுகளும் 16 பெண் ஆடுகளுமாக 21 ஆடுகள் 2021 திசெம்பர் 31 இல் மரணித்திருந்ததுடன் மரணித்த ஆடுகளின் பெறுமதி ரூபா 8,036,275 ஆக இருந்தது. இப்பெறுமதி ஆரம்ப முதலீட்டின் 21 சதவீதமாக இருந்ததுடன் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முன்னர் இக்கால்நடைகளுக்காக இதுவரை செலவிடப்பட்ட நிறுவன மற்றும் பராமரிப்பு செலவினம் செயற்திறனாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே ஆடுகள் இறக்குமதிக்காக பெறுகைக்குழு 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த | இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகள் புதிய சுற்றாடல் நிலைக்கு மாறவேண்டியுள்ளதுடன் அவ்வாறு மாற்றத்திற்கு உட்படாத கால்நடைகள் மரணிக்கக்கூடிய நிலைமை காணப்படுவதாக காலநடை சுகாதார சான்றிதல் (Health Protocol) தொடர்பாக அவுஸ்திரேலியா தனிமைப்படுத்தல் நிறுவனம் மற்றும் இலங்கையின் தனிமைப்படுத்தல் பிரிவுகளுக்கிடையே இறுதி இணக்கப்பாட்டிற்கு வரமுடியாமையால் இறக்குமதியில் தாமதம் ஏற்பட்டது. | இலங்கையின் காலநிலைக்கு இனங்கும் கால்நடைகளை இறக்கமதி செய்தல் மற்றும் நட்டத்தை குறைக்கும் வகையில் செயற்பட வேண்டும் |

போதும் 2019 ஆம் ஆண்டின் போதே இறக்குமதி செய்யப்பட்டிருந்தமையால் அந்நிய செலாவணி விகித வேறுபாடு ரூபா 2,311,760 தொகை மேலதிகமாக கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்தது.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கரந்தகொல்ல கால்நடை வளர்ப்பு கல்லூரியின் டிப்ளோமா பாடநெறி NVQ 5, 6 மட்டத்திற்கு உயர்த்துவதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகளின் கீழ் தீயணைப்பு உபகரணங்கள் பொருத்துவதற்காக ரூபா 675,800 கொடுப்பனவு செய்து 2020 ஒக்தோபர் 16 ஆந் திகதி அந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த உபகரணங்களை பொருத் துவதற்காக முறைமைக்குரிய ரூபா 213,500 ஆன 30 மீற்றர் (100அடி) நீள கொம்பிலீட் ஹோர்ஸ் ரீல் (Complete Hose Reel) 7 நிறுவப்படாமல் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டன. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது நிதி ஏற்பாடு இல்லாதிருந்த மையால் அந்த கம்லீட் ஹோஸ் ரீல் நிறுவ முடியாமல் இருந்ததாக | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | இம்புலந்தண்ட ஆடுகள் இன விருத்தி நிலையம் அமைந்துள்ள 37 ஏக்கர் காணியில் 10 ஏக்கர்களும் கரந்தகொல்ல கோழி ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள 25 ஏக்கர் காணியில் 06 ஏக்கரும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | இந்த 10 ஏக்கரில் புல் வளர்க்கப்பட்டுள்ள போதும் வரட்சி காலநிலை காணப்பட்டமையால் காய்ந்திருந்தமையாலும் கோழி ஆராய்ச்சி நிலையத்தின் 6 ஏக்கர் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக காணி பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | கரந்தகொல்ல கோழி ஆராய்ச்சி நிலையத்தில் 2015 ஆம் ஆண்டிலிருந்து அப்போது காணப்பட்ட தாரா கூடு ரூபா 1,562,000 செலவிட்டு மாட்டுத் தொழுவமொன்றாக மாற்றப்பட்டிருந்த போதும் அது | போதியளவு பதவியணியொன்றை அங்கீகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக | வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டும் |

2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 612 ஆம் அதிகாரத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் 95 உத்தியோகத்தர்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,380,528 ஆன பிணைத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதுவரை பிணை வைப்பினை வைப்புச் செய்யாத உத்தியோகத்தர்களின் பிணை மாதந்த சம்பளத்தில் தவணையாக அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | உரிய பிரமாணங்களின் பிரகாரம் உரிய பிணை வைக்க வேண்டும். |

### 3.8 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு விட்டு விடுவதற்கு 3 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 518,776 ஆன நட்டங்கள் காணப்பட்டதுடன் அதில் ஒரு சந்தர்ப்பத்திற்குரிய ரூபா 430,000 ஆன நட்டம் 32 ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்தது. | குறிப்பிடப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்வதாக | நட்டங்களை குறைத்துக் கொள்வதற்கும் இடம் பெற்ற நட்டங்கள் தொடர்பாக பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1998 ஆம் ஆண்டின் போது கோழி வசூரி தடுப்பூசி வடி 1,500,000 இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 637,300 வடிகள் மாத்திரம் வெளிக்களத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 862,700 | வெளிக்களத்தில் கேள்வி குறைவடைந்த மையால் இக் காலாவதியாதல் இடம் பெற்றிருந்ததாகவும் இதன் பின்னர் தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு வழங்கல் மேற்கொள்வதாக | தேவைப்பாட்டை இனங்கண்டு பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை உச்ச அளவில் |

| | | |
|---|---|---|
| ஊசி வடிகள் பயன்படுத்தப்படாமையால் 2000 ஆம் ஆண்டின் போது காலாவதியாகி இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 948,970 ஆக இருந்தது. இந்த நட்டம் 2021 ஆம் ஆண்டின் போது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) அரச முகாமைத்துவ உதவி சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் 2019 யூன் முதல் அட்டவணைப் படுத்தப்பட்ட வீடொன்றில் குடியிருப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீட்டுக்கூலி ரூபா 201,305 குறைத்து அறவிடப்பட்டிருந்தது | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் குறிக்கப்பட்ட வாடகை அறவிடப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| திணைக்களம் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக அறிந்து திணைக்களத்தின் செயற்பாடு களுக்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் உட்பட அந்த இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகளும் இனங் காணப்பட்டிருந்த போதும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி அடைந்து கொள்வதனை மதிப்பிடுவதற்காக பொருத்தமான தரவு அடிப்படையொன்று திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்குரிய திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள் ளதாக | இலக்குகளை அடைந்துகொள்வதற்காக பொருத்தமான தரவு அடிப்படையொன்றை திட்டமிடல் வேண்டும் |

## 5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 28 பதவிகளில் 61 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களில் மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவியொன்றும் 06 பணிப்பாளர் பதவிகளும் 6 பிரதான விஞ்ஞான நிபுணர் பதவிகளும் 7 கால்நடை புலனாய்வு உத்தியோகத்தர்கள் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை | திணைக்களத்தின் செயற்திட்டங்களுக்குரிய தேவைப்பாடுகளின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஆரம்ப மட்டத்தில் 103 வெற்றிடங்கள் காணப்பட்டதால் வெளிக்கள கடமைகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் உருவாகியிருந்தன | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை | - மேற்படி - |